வாரியம், மதுரை மண்டலத்தைச் சேர்ந்த கமர்ஷியல் டாக்ஸ் டெபுடி கமிஷனரை விசாரித்ததில், சின்னமானூரில் வணிகர்கள் கழகமே இல்லை என்ற தகவல்தான் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் சர்க்கரை வியாபாரிகள் 18, 19 பேர்கள் சேர்ந்த சங்கம்தான் இருந்தது. அந்த சங்கம் கூட 1968 மார்ச் மாதத்திற்கு மேல் செயல்படவில்லை என்று மட்டும் தகவல் கிடைத்திருக்கிறது.

Government Godown at Tiruvarur.

* 20 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the **Hon.** the Minister for Food and Agriculture be pleased to state—

(a) whether it was found out **that there** was a **deficiency of** 35,000 kalams of paddy in the stock held in the **Government** Godown at Tiruvarur of Thanjavur **district** during **1967–68;**

(b) if so, the reasons therefor; **and**

(c) whether it is a fact that 25 thousand bags of paddy were spoilt as a result of storing the harvested **paddy without having it** dried?

திருவாரூரிலுள்ள அரசாங்க கிடங்கு

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு உணவு வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1967-68-ல் தஞ்சாவூர் மாவட்ட திருவாரூரிலுள்ள அரசாங்க கிடங்கில் நெல் இருப்பு வைத்திருந்ததில் 35 ஆயிரம் கலம் குறைந்ததா?

(ஆ) ஆமெனில், அதற்குரிய காரணங்கள் யாவை?

(இ) பச்சை நெல்லை காய வைக்காமல் கிடங்கில் கொட்டி வைத்ததில் 25 ஆயிரம் மூட்டை நெல் கெட்டுப் போனதா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ) இல்லை. திருவாரூரில் அரசாங்கக் கிடங்கு ஏதும் இல்லை.

(ஆ) & (இ) இவ்வினாக்கள் எழவில்லை.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, அது அரசாங்கக் கிடங்காக இல்லாவிட்டாலும் கூட, கூட்டுறவு இலாகாவும் அரசாங்கத்தின் அங்கம்தான். அப்படி கூட்டுறவு இலாகா கிடங்கு இருக்கிறதா? மத்திய அரசாங்க உணவு இலாகா கிடங்கு இருக்கிறதா? எனக்குக் கிடைத்த தகவலின்படி பச்சை நெல்லைக் காயவைக்காமல் அடுக்கிவைத்ததால் 25,000 மூட்டை நெல் கெட்டு விட்டதாகத் தெரிகிறது. அது மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்ததா, கூட்டுறவு இலாகாவைச் சேர்ந்ததா அல்லது மாநில அரசாங்கத்தைச் சேர்ந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: தஞ்சாவூர் கோவாபரேட்டிவ் மார்கெட்டிங் பெடரேஷன் திருவாரூர் கிளையில் நவீன

[22nd February 1969

ஆலேயில்தான் அந்த நெல் தேக்கி வைக்கப்பட்டிருக்கிறது. அது முழுமையாகக் கெடவில்லே. அதை அரிசியாக்கிய நேரத்தில் அந்த அரிசியினுடைய நிறம் மட்டும் மாறியது.

திரு. என். ஆர். தியாகராஜன்: இந்த கெட்டுபோன நெல்லே மதுரையிலுள்ள வியாபாரிகளேக் கொண்டு அறைத்து மக்களுக்கு கொடுக்கும்படி கட்டயிடப்பட்டதா? அந்த அரிசி சாப்பிட லாயக்கில்லாதது என்று பொதுமக்கள் கூறி அதை வாங்க மறுத்து விட்டார்கள். அந்த அரிசி பிறகு மலேப்பிரதேசங்களாக உள்ள கொடைக்கானல், ஊட்டியில் உள்ளவர்களுக்கு, அரிசியைப் பார்க்க காதவர்களுக்கு, அரிசியின் நிறம் தெரியாதவர்களுக்கு, அரிசியின் வாடை தெரியாதவர்களுக்கு அனுப்பப்பட்டது என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: அந்த அரிசி தேனிக்குப் போனது உண்மை. தேனியில் அது என்ன ஆனது என்று தெரிய வில்லே.

Seizure of paddy from smugglers.

* 21. Q.—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(a) whether 219 bags of paddy were seized from smugglers in February 1968 near Jayankondan; and

(b) the result of the case filed against the lorry-owners?

கடத்தல்காரர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட அரிசி

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு உணவு வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஜெயங்கொண்டம் அருகே 1968 பிப்ரவரியில் 219 நெல் மூட்டைகள் கடத்தல்காரர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டதா?

(இ) லாரி உரிமையாளர்கள் மீது தொடுத்த வழக்கின் முடிவென்ன?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ) ஆம். ஜயங்கொண்டம் என்னுமிடத்தில் இரண்டு சரக்கு பேருந்துகளிலிருந்து (Lorry) 219 நெல் மூட்டைகள் 14—2—1968-ல் கைப்பற்றபட்டன.

(இ) ஜயங்கொண்டம் தாசில்தார், கைப்பற்றிய மூட்டைகளுடன் இரண்டு லாரிகளேயும் காவல்துறை மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தார். கைப்பற்றிய நெல் மூட்டைகளுடன் இரண்டு லாரிகளும் அரியலூர், துணேக்கோட்ட மாஜிஸ்திரேட்டிடம் முன்னிலேப்படுத்தப்பட்டன. அரியலூரிலுள்ள, அரியலூர் கூட்டுறவு விற்பனேச் சங்க நிறுவனத்திடம் நெல் மூட்டைகள் ஒப்படைக்கப்பட்டு அந்த நெல்லின் விற்று முதலே நீதிமன்ற ஆணேகளின்படி கட்டி விட வேண்டுமென்று மேற்படி சங்கத்திடம் கேட்டுக்கொள்ளப்பட்டது. தமிழ்நாடு நெல், அரிசி (போக்குவரத்துக் கட்டுப்பாடு) ஆணேயின்படி குற்றம் இழைத்ததாகச் சரியான சாட்சியம் எதுவுமில்லேயாதலால், புலனாய்விற்குப் பிறகு இவ்